

புதுடெல்லியில், நேற்று முன்தினம் (08.01.2026) ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் முனைவர் வீரேந்திர குமார் தலைமையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–ன் கீழ் அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 8வது கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் சார்பாக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார். மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்/அரசு சிறப்பு செயலாளர் ம.லட்சுமி., உடனிருந்தார்.



புதுடெல்லியில், நேற்று முன்தினம் (08.01.2026) இந்திய வர்த்தக மேம்பாட்டு சபை சார்பில் நடைபெற்ற பால்பண்ணை செயலாக்கம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாட்டில், பால்வளத்துறையில் நிலைத்தன்மை மற்றும் விவசாயிகள் நலனை ஊக்குவிக்கும் மாநில அரசின் சிறந்த தலைவருக்கான விருது, மற்றும் ஆவின் நிறுவனத்துக்கு 2026 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாநில கூட்டுறவு நிறுவன ”டெய்ரி டைடன் விருது ஆகியவை பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அவர்களிடம் வழங்கப்பட்டது.

### தூத்துக்குடியில் இன்று

# தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாம்கள்!

## அமைச்சர் கீதாஜீவன் தகவல்!



தூத்துக்குடி, ஜன. 10 - தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் கீதா ஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, மீன்பிடி மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை மேற்கொண்டு வரும் 18 வயது முதல் 60 வயது வரை உள்ள மீனவ மக்கள் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்திட தமிழ்நாடு மீனவர் நல வாரிய தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஏற்பாட்டில் சிறப்பு முகாம்கள் தூத்துக்குடியில் இன்று (ஜனவரி 10ஆம் தேதி சனிக்கிழமை) காலை 9 மணிக்கு திரேஸ்புரம் பகுதியிலும், காலை 10 மணிக்கு கடற்கரைச் சாலையில் உள்ள மீன்பிடி துறைமுகத்திலும், காலை 1 மணிக்கு பாத்திமா நகர் ஆலய வளாகத்திலும் நடைபெற உள்ளன.

இந்த சிறப்பு முகாம்களை மாநில, மாவட்ட, மாநகர மீனவரணி நிர்வாகிகள் ஒருங்கிணைக்கிறார்கள்.

இந்த சிறப்பு முகாம்கள் எனது தலைமையில் மற்றும் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடைத் துறை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற உள்ளன.

மேலும் தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, துணை மேயர் திருமதி.ஜெனிட்டா செல்வராஜ், மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாநில மீனவரணி துணை செயலாளர் துறைமுகம் புளோரன்ஸ்,

மாவட்ட மீனவரணி அமைப்பாளர் அமைப்பாளர் அந்தோணி ஸ்டாலின், மாநகராட்சி வடக்கு மண்டல தலைவர் நிர்மல்ராஜ், பகுதி செயலாளர் ராமகிருஷ்ணன், மாநகர மீனவரணி அமைப்பாளர் டேனியல், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ரெக்ஸ்லின், திருமதி.பவானி மார்ஷல், திருமதி.மெட்டில்டா, வட்டக்கழக செயலாளர்கள் ரவிச்சந்திரன், டென்சிங், திரு.தினகரன், சூசை அந்தோணி, லியோ ஜான்சன், ஆல்பர்ட் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

மேலும் சிறப்பு முகாம்களில் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்வதற்கு மீன்படி மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை செய்து வரும் மீனவ மக்கள் புகைப்படம், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை மற்றும வாரிசுதாரர்களின் ஆதார் அட்டை நகல் உள்ளிட்ட ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும். தமிழ்நாடு மீனவர் நல நல வாரியத்தில் இதுவரை பதிவு செய்யாத மீன்படி மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை செய்து வரும் மீனவ மக்கள் மேற்கண்ட சிறப்பு முகாம்களைப் பயன்படுத்தி உறுப்பினராகப் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# திராவிடப் பொங்கல் விழா - விளையாட்டுப் போட்டிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



நெல்லை. ஜன.10 - முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் திராவிட பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள் இன்று (10.01.2026 - சனி , நாளை (11.01.2026 - ஞாயிறு ) ஆகிய 2 நாட்கள் கிரிக்கெட், சைக்கிள்,ஓட்டப்பந்தயம் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் மண்டலம்,ஒன்றிய,பேரூர் வாரியாக நடைபெறுகிறது.என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.

அது பற்றிய இடம் விவரம் வருமாறு.

இன்று (10.1.2026) மானூர் மேற்கு ஒன்றியம் கே.எம்.பி.பள்ளி அருகில் உள்ள மைதானம் மானூர். மானூர் கிழக்கு ஒன்றியம் ஆர்.சி.சர்ச் மைதானம் அலவந்தான்குளம். மானூர் தெற்கு ஒன்றியம் சி.ஆர். காலனி மைதானம் கோடகநல்லூர்.

நாரணம்ம்மாள்புரம் பேரூர் ஹவுசிங் போர்டு மைதானம் நாரணம்ம்மாள்புரம்.

சங்கர் நகர் பேரூர் சி. நகர் மைதானம் தாழையூத்து.

தச்சநல்லூர் பகுதி கோகுல் நகர் மைதானம் தச்சநல்லூர். நெல்லை பேட்டை பகுதி சர்தார்புரம் மைதானம் பழைய பேட்டை.

பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி பாளை தெற்கு பகுதி ஜான்ஸ் பள்ளி மைதானம் பாளையங்கோட்டை.

பாளை வடக்குப் பகுதி ஜான்சி பள்ளி மைதானம் பாளையங்கோட்டை.

மேலப்பாளையம் கிழக்கு பகுதி ஜி.வி மைதானம் திருநகர் மேலப்பாளையம். மேற்கு பகுதி மினி அண்ணா ஸ்டேடியம் மேலப்பாளையம். ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சி நிறைவில் மண்டல,ஒன்றிய, பேரூர் வாரியாக வெற்றி பெற்ற அணிகளை கொண்டு மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் நாளை (11.01.2026 ) பாளையங்கோட்டை தூய யோவான் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெறுகிறது

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க . சார்பில் திராவிடப் பொங்கல் திருவிழா!

# விளையாட்டுப் போட்டிகள் - ரூ.30,000 பரிசு - கோப்பை!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.அறிவிப்பு!



தென்காசி, ஜன. 10 - தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அணிகள் மட்டும் கலந்து கொள்ளும் கிரிக்கெட் போட்டி (07.01.2026 முதல் 09.01. 2026) வரை 25 அணிகள் கலந்து கொள்ளும் கிரிக்கெட் போட்டி சங்கரன்கோவில் தொகுதி சங்கரன்கோவில் அச்சம் பட்டி ரோட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.பங்கேற்று கிரிக்கெட் விளையாடி போட்டியை துவக்கி வைத்தார்.

இதில் வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசு ரூபாய் 15,000,ம் கோப்பை, 2 வது பரிசு ரூபாய் 10,000,ம் கோப்பை, 3 வது பரிசு ரூபாய் 5,000,ம் கோப்பை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இன்று ( 10 ஆம் தேதி), நாளை (11 ஆம் தேதி) (2 நாட்கள்) அதாவது சங்கரன்கோவில் கோமதிஅம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைபள்ளி மைதானத்தில் கபாடி போட்டி நடைபெறுகிறது.

12ஆம் தேதி சங்கரன்கோவில் அச்சம்பட்டி ரோட்டில் உள்ள தனியார் மைதானத்தில் கால்பந்து போட்டி நடைபெறுகிறது.

7ம் தேதி தொடங்கிய கிரிக்கெட் போட்டி நிகழ்வில் மாவட்ட பொருளாளர் இல.சரவணன், ஒன்றிய செயலாளர் பெரிய துரை, நகர செயலாளர் மு.பிரகாஷ், வழக்கறிஞர் கண்ணன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞரணி பிச்சையா, நெசவாளரணி சந்திரன் மற்றும் இளைஞரணி அன்சாரி, தொண்டரணி அப்பாஸ் அலி, வழக்கறிஞரணி காளிராஜ், பிரபாகரன் உள்பட விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. செய்துள்ளார்.

### மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் – 2016–ன் கீழ்

# அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 8-வது கூட்டம்!

## புதுடெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

சென்னை, ஜன. 10 - மாற்றுத்திறனாளிகள் நலனுக்காகவும். அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. இச்சட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், ஒன்றிய அரசிற்கு உரிய ஆலோசனை வழங்கவும், மத்திய ஆலோசனை வாரியம் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த மத்திய ஆலோசனை வாரியத்தின் 8-ஆவது குழுக் கூட்டம் புது டெல்லி டாக்டர். அம்பேத்கர் சர்வதேச மைய வளாகத்தில் நேற்று (08.01.2025) ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் முனைவர். வீரேந்திர குமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணை அமைச்சர் பி.எல். வர்மா, மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரமளித்தல் துறையின் ஒன்றிய அரசு செயலாளர் செல்வி. வி.வித்யாவதி ஒன்றிய அரசின் இணை செயலாளர்கள், இயக்குனர்கள் மற்றும் பிற மாநில அரசுகளின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை நிர்வகிக்கும் முதலமைச்சர் அவர்களின் சார்பாக, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் அவர்களுடன் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் ஆணையர்/அரசு சிறப்பு செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை திருமதி.எம்.லஷ்மி. கலந்து கொண்டனர்.

அமைச்சர் மருத்துவர். மா.மதிவேந்தன் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் பல முன்னோடி திட்டங்களை எடுத்துரைத்து சில முக்கிய கோரிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளையும் ஒன்றிய அரசின் பரிசீலனைக்காக முன்வைத்தார்.

ஒன்றிய அரசு நிர்வகித்து வரும் தனித்துவ அடையாள அட்டை (UDID) தரவுத்தளத்தில் தமிழ்நாடு அரசிற்கு இணைய இசைவு வழங்கிட அமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது. இக்கோரிக்கை ஒன்றிய அரசால் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிற்கு இணைய இசைவு வழங்கியதற்கு அமைச்சர் அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இயக்கக் குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு சக்கர வாகனங்கள் வாங்கும் போது வழங்கப்பட்டு வந்த GST வரிவிலக்கை தொடர்ந்திடவும், கேட்கும் கருவிகளுக்கு வழங்கப்படும் GST விலக்கு போன்று, அனைத்து உதவி உபகரணங்களுக்கும் GST விலக்கு வழங்க வேண்டியும், மாற்றுத்திறனாளிகளை பணிக்கு அமர்த்தும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த பல்வேறு சலுகைகளை மீண்டும் நடைமுறைப்படுத்திடவும் அமைச்சர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டது.

மேலும், மாநில UDID ஒருங்கிணைப்பாளர் ஊதிய நிலுவைத் தொகையான 9 இலட்சத்தினை விரைவில் விடுவித்திடவும், தேசிய மாற்றுத்திறனாளிகள் நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்தால் (NDFDC) ஒதுக்கப்பட்ட 50 கோடி கடன் உதவி நிதியை தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு விரைவில் விடுவித்திட வும். ஒன்றிய அரசின் ACCESSIBLE INDIA CAMPAIGN திட்டத்தின் தமிழ்நாட்டிற்கான இறுதி தவணைத் தொகையான 13.81 கோடி ரூபாயினை விரைவில் விடுவித்திடவும், மாநில மாற்றுத்திறனாளிகள் ஆணையர் அலுவலகத்தை வலுப்படுத்த 2.21 கோடி நிதி ஒதிக்கிடவும் அமைச்சர் அவர்களால் நிதி ஒதுக்கீடு தொடர்பான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், உதவி உபகரணங்களுக்கான ஒன்றிய அரசின் ARJUN இணையதளத்தை பயன்படுத்த தமிழ்நாடு அரசிற்கு இசைவு வழங்கிடவும், ஒன்றிய அரசின் UDID தரவுத்தளத்தில் தமிழ்நாட்டினை சேர்ந்த 45000ற்கும் மேற்பட்ட இறந்தோரின் தரவுகளை கள ஆய்வுகளின் அடிப்படையில் நீக்குவதற்கான வசதியினை ஏற்படுத்திடவும், தேசிய கல்வி உதவித்தொகை இணையதளம் (NSP) மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில்லா மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதை முறைப்படுத்திடவும் அமைச்சர் அவர்களால் கோரப்பட்டது.

இறுதியாக. REHABILITATION COUNCIL OF INDIA ACT, 1992 சட்டத்தின் கீழ் புகாரளிக்க மாற்றுத்திறனாளிகள் நல ஆணைய அதிகாரியினை தமிழ்நாட்டிற்கான அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக நியமித்திட கோரியும் தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாக அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் அவர்கள் ஒன்றிய அமைச்சர் அவர்களிடமும் ஒன்றிய அரசின் செயலாளர் அவர்களிடமும் கடிதங்களை வழங்கினார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் செல்லம்பட்டு கிராமத்தில், அரசு விரைவு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் துணைப் பொதுச்செயலாளர் மறைந்த சி.பி.இளங்கோ அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு திருவுருவப் படத்தை அவரது இல்லத்தில் திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார், இந்நிகழ்வில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், மாநில மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி மற்றும் அரசு விரைவு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் பொதுச்செயலாளர் பன்னீர்செல்வம், தொழிற்சங்க நிர்வாகிகள், தொழிற்சங்க தோழர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

### பரமக்குடி அரசு மருத்துவமனையை

# மாவட்ட மருத்துவமனையாக மேம்படுத்த ரூ.58.50 கோடியில் புதிய கட்டிடம்!

## செ.முருகேசன் எம்.எல்.ஏ. ஆய்வு!

பரமக்குடி, ஜன. 10 - பரமக்குடி அரசு மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாக மேம்படுத்தும் பணிகள் தீவிரமாக நடை பெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ரூ.58.50 கோடி செலவில் தரைதளம் உட்பட 5 தளங்கள் கொண்ட புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்டுமானப் பணிகள் தற்போது 99 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதிய கட்டிடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மருந்தகம், சி.டி ஸ்கேன், எம்.ஆர்.ஐ, எக்ஸ்ரே பிரிவு, நவீன அறுவை சிகிச்சை அரங்குகள், அவசர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளுக்கான வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கூடுதல் சிகிச்சை பிரிவு கட்டிடங்கள் மற்றும் துணை சுகாதார கட்டிடங்களும் கட்டப்பட்டு வருவதால், பரமக்குடி மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு உயர் தர மருத்துவ சேவைகள் கிடைக்கும் வகையில் இந்த மருத்துவமனை உருவாகி வருகிறது.

இந்த நிலையில், பரமக்குடி எம்.எல்.ஏ செ.முருகேசன் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை நேரில் ஆய்வு செய்தார். அப்போது பணிகளின் தரம், பயன்பாட்டு வசதிகள் மற்றும் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆய்வின் போது பரமக்குடி அரசு தலைமை மருத்துவர் முத்தரசன், செயற்பொறியாளர் குருதி வேல்மாறன், உதவி செயற்பொறியாளர் அருணகிரி, பரமக்குடி நகர் மன்றத் தலைவர் சேது கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர். மேலும் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஜெயக்குமார், நகர்மன்ற உறுப்பினர்கள் ராதா பூசத்துரை, மாரியம்மாள் மும்மூர்த்தி, லண்டன் ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் சேதுபதி, மாவட்ட பிரதிநிதிகள் தியாகராஜன், வேலாயுதம், பரமக்குடி மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் பிச்சைமுத்து, பார்த்திபனூர் நகர செயலாளர் ஜெய்லாலுதீன் சேட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட தலைமை மருத்துவமனையாக மேம்படுத்தப்படும் இந்த மருத்துவமனை செயல்பாட்டுக்கு வந்தால், ராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களுக்கு உயர்தர மருத்துவ சேவைகள் எளிதில் கிடைக்கும்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், எறையூர் ஊராட்சி புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உளுந்தூர் பேட்டை சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு, பதக்கங்களை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்து, தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இதில் பொதுக்குழு உறுப்பினர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆசிர்வாதம், ஊராட்சி மன்ற தலைவர் அனுசியா, பள்ளி தலைமை ஆசிரியர் எஸ்.ஆர்.பிந்து மேரி, உதவி ஆசிரியர் எஸ்.ஆர்.ரஞ்சிதம், மாவட்ட பொன்காக் சிலாட் செயளாலர் மற்றும் தமிழ்நாடு பயிற்சியாளர் உள்ளிட்ட பலர்ககலந்து கொண்டனர்.